முருகப்பெருமான் துணை

**இந்த நூல் முருகப்பெருமானே அரங்கமகானுக்காக கருணைக்கொண்டு கைப்பட எழுதிய நூலாகும் இதை பக்தியுடன் படிப்பவர்களுக்கு ஞானம் சித்திக்கும் என்பது சத்தியம் சத்தியம் சத்தியம்**

**துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

**பாகம்: 573**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

24.04.2021, சனிக்கிழமை

1. ஓங்கார வேலிகொண்ட அரங்கா போற்றி
ஓங்கார குடிலமைத்த தேசிகா போற்றி
ஓங்காரன் என் சக்தியான குருராஜனே போற்றி
ஓங்காரன் யானும் உந்தனுக்கு ஞான அறிவுரை ஆசி
2. ஆசிதனை பிலவ தகர் திங்களில் அருளுவேன்
அரங்கனுக்கு மேலும் புகழ்சேர
வாசிவென்ற சூட்சும சக்திகளும்
வலம்வந்து உந்தனோடு இணைந்து நிற்க
3. நிற்கவே உன் கரம்பட்ட மக்கள்
நிலைத்தன்மை பெற்று உலகில் அழியாமை பெறுவர்
பெறுவதோடு அரங்கன் உன் கொள்கையை ஏற்று
பிசகில்லா உலகமெங்கும் உன் புகழ்பாடி
4. அழியாமை பெற்று உலக மக்களை
ஆன்மீக ஞானவழி மாற்றம் செய்வதோடு
மாற்றம் தனை ஞானயுகமாக்கி இனிதே
மண்ணுலகம் பாதுகாப்புற வகை செய்வர்
5. வகையான உன் சீடர் படைகட்கு
வல்லமைபட வடிவேலன் துணையாய் யான் நிற்க
பிழையில்லா நல் ஞானஉலகம்
பிசகில்லா உன்னருளால் வாய்க்கக்கூடும்
6. கூடவே அரங்கன் உன் கொள்கையே
குவலயத்தை மாற்றி அருள்புரியும்
ஈடேறும் இந்த உலகம் சடுதி உன் கரத்தால்
இனிதே சக்திபெற்று ஞானயுகமாக
7. யுகமாகும் ஐயமற எந்தன் துணையோடு
உயர்வான நிலைகண்டு பாதுகாப்பு பெற
தயவாக உள்ள அரங்கனே
தான்உன் தவமும் தர்மமும் இந்த உலகை மாற்றும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–

*ஐயன் வேலவன் அடியினைப் போற்றிட*
*வையகம் போற்ற வாழ்வார் நலமே!*
*பற்றறுத்த வேலவன் பதத்தை பற்றிட*
*நற்றவமும் சித்திக்கும் நமனும் அஞ்சுவன்!*
*ஆட்சிதான் மாற்றமும் அருளுவான் வேலனும்*
*மாட்சிமை மிக்க மக்கள் வாழவே!*

துறையூர் ஓங்காரக்குடில் மூலமாக ஆசான் முருகப்பெருமான் ஆசியால் 20 கோடி பேர்களுக்கு மேலாக தொடர்ந்து அன்னதானம் செய்து வருகிறோம். இனிவரும் காலங்களிலும் முருகப்பெருமான் துணையுடன் மேன்மேலும் சிறப்பாக அன்னதானம் செய்வோம்.

– ஆறுமுக அரங்கமகா தேசிகர்.